விரைவில்வெளிவருகிறது!
எத்தர்களின் எதிரி
பித்தர்களின் வைரி
தீப்பொறி
ஆசிரியர்: ம.க.அ. அந்தனிசில்
பக்கங்கள் எட்டு,
ஆருங்கள் தொட்டு
360, பிரதானவீதி, யாழ்ப்பாணம்

பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

ஈழநாடு

The EELA NADU

டலர்: 20 ... ஷிபா: 26 இதழ்: 172
யாழ்ப்பாணம் புதன்கிழமை 2-8-78

புதிதாகிய உலகின் விடிவெள்ளி
விரைவில் பவனிவருகிறது துள்ளி!
தீப்பொறி
ஆசிரியர்: ம.க.அ. அந்தனிசில்
எண்சுவை பக்கங்கள்
பல்சுவை அம்சங்கள்
தொடர்புகொள்ளவேண்டிய
முகவரி:
360, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

"யாழ்ப்பாணத்தில் மேயர் துரையப்பா காலத்தில்

பூ.ல.சு.கட்சியை பலப்படுத்த 42 தமிழ் இளைஞர் கைதாகினர்"

ஜனதிபதிகமிஷன் விசாரணை நேற்று ஆரம்பமானது

முன்னாள் அரசின் ஊழல், துஷ்பிரயோகம், அரசியல் பழிவாங்கல் பற்றி பிரஸ்தாபம்

(நமது கொழும்பு நிருபர் மாலி)

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பலப்படுத்தவும், அன்று யாழ். மேயராகவிருந்த திரு. அல்பிரட் துரையப்பாவின் செல்வாக்கை அதிகரிக்கவும், யாழ்ப்பாணத்தில் 42 தமிழ் இளைஞர்கள் அன்று கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். இந்த ஏற்பாட்டை முன்னாள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் ஆர். டி. பண்டாரநாயக்கா முன்நின்று செய்துவைத்தார்.

இவ்வாறு நேற்றுக்காலை ஜனதிபதி கமிஷன் முன்னிலையில் அரசுதரப்புக்குழுத்தலைவர் திரு. ஏ. ஸி. டி. சொய்ஸா ஆரம்பஉரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

திரு. ஏ. ஸி. டி. சொய்ஸா தொடர்ந்து கூறுகையில்; திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மோசடி, அரசியல் பழிவாங்கல்கள்மீது விசாரணை நடத்துவதற்குநியமிக்கப்பட்ட ஜனதிபதி கமிஷனுக்கு இதுவரை கிடைத்துள்ள 1500 புகார்களில் 95 வீதமானவை கடந்த அரசின் பிரதமர், அமைச்சர்கள், அதிகாரிகளினால் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பானவையாகும் என்று கூறினார்.

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் உள்ளமுன்னாள் உயர்நீதிமன்றக்கட்டிடத்தில், இவ்விசாரணைக்கமிஷன் நேற்றுக்காலை தனது விசாரணையை ஆரம்பித்தது.

1970 முதல் 1977 வரை

1970-ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி முதல் 77ம் ஆண்டு ஜூலை 23ந் திகதி வரையிலான ஆட்சிக்காலத்தில்இடம்பெற்ற அதிகார துஷ்பிரயோகம், தலையீடு, மோசடி,, ஊழல், அரசியல் பழிவாங்கல் முதலிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட இக்கமிஷன் தலைவர் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஜே. ஸி. டி. வீரரத்ன, மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தா, கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. கே. ஸி. டி. சில்வா ஆகியோர் முன்னிலையில் நேற்று ஆரம்பமானது.

கமிஷன் சொலாளர் திரு. ஜே. வை. டி. சில்வா நேற்றுக் காலை கமிஷனின் பணிகளை எடுத்துரைத்தார்.

'செல்வா'வின் செல்வாக்கைக் குறைக்க

அரச தரப்புக் குழுவுக்குத் தலைமைவகிக்கும் திரு. ஏ. ஸி. டி. சொய்ஸா, நேற்றுக் காலை, விசேஷ ஜனதிபதி ஆணைக்குழு முன்னிலையில் தொடர்ந்து உரையாற்றுகையில், யாழ்ப்பாணத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினதும் திரு. துரையப்பாவினதும் செல்வாக்கை அதிகரிக்கவும், வலுப்படுத்தவும் 42 தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொண்ட அன்றைய நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டார நாயக்கா, பின்னர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் செல்வாக்கைக் குறைக்க, அவரைத் தேர்தலில் தோற்கடிக்க, திரு. அல்பிரட் துரையப்பா, தமது செல்வாக்கில் அந்த 42 தமிழ் இளைஞர்களையும் விடுதலைசெய்ய திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டார நாயக்கா நடவடிக்கைகள் மேற்கொண்டார் என்று தெரிவித்தார்.

என்ன நடந்தது?

"அப்படியிருந்தும், யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வளர்ச்சி பெறவில்லை. இதன் அமைப்பாளர் திரு. துரையப்பா கொலை செய்யப்பட்டார். அன்றைய தமிழரசுக்கட்சியினர், பொலிஸாரினால் பலத்த துன்புறுத்தலுக்குள்ளாகினர். இத்தனை கொடுமைகளும் கடந்தகால அரசின் 70 மாதகால அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடைபெற்றன" என்றும் திரு. ஏ. ஸி. டி. சொய்ஸா தெரிவித்தார்.

முக்கியமான சில அம்சங்கள்

அரச தரப்புக் குழுவுக்குத் தலைமைவகிக்கும் திரு. ஏ. ஸி. டி. சொய்ஸா நேற்று, ஜனதிபதி விசாரணைக் கமிஷன முன்னிலையில் தெரிவித்த சில குறிப்பிட்ட அம்சங்கள் வருமாறு;

'காணிஉச்சவரம்புச் சட்டம் அமுலுக்கு வருவதை எட்டு நாட்களுக்கு தாமதித்ததன் மூலம்; முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா தமக்கும் பிள்ளைகளுக்கும் சொந்தமான காணிகளின் ஒரு பகுதியை விற்பனை செய்து ஐம்பது லட்சம்ரூபா பெற்றது.

● முன்னாள் பண்டாரகம எம். பி. 60,000 யார்புடவை மோசடி செய்தது.

● முன்னாள் அமைச்சர் திரு. [illegible] லண்டனில் கண்சிகிச்சை பெற்றபோது, லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திலிருந்து பணம் வசூலித்தது.

● பேசாலை எண்ணெய்க் கிணறு என்று 'பூச்சாண்டி' காட்டி, பெரும்தொகையான பணம் செலவிடப்பட்டது.

● முன்னாள் பிரதமரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களுக்கு வேலைவழங்கப்பட்டமை.

● அன்று எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் உயிருக்கு பொலிசார் அச்சுறுத்தியமை.

● நீதிமன்றத்தை அவமதித்ததாகக்கூறி, திரு. காமினி திஸநாயக்காமீது வழக்குத் தொடர, திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா எவ்விதமாக பொலிஸாரை பயன்படுத்தியமை.

● முன்னாள் கல்வி அமைச்சர் ஜனப் பதியுதீன் மஹ்மூத் எவ்விதமாக வெளிச்செலாவணியை மீறினார்.

● சரைச்சாலையைச் சேர்ந்த ஒருவர் எவ்விதமாக உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவி உயர்வு பெற்றார்.

● முன்னாள் கொழும்பு நகரமேயர் ஜனப் பௌஸியின் அதிகார துஷ்பிரயோகங்கள்.

● அழகுராணி மனம்பெரி எவ்விதமாகக் கொலை செய்யப்பட்டார்.

● திரு. பீலிக்ஸின் பாரியாரின் தங்கையின் கணவர் அரசாங்கத்தில் வகித்த பங்கு

● அமைச்சர்களின் அதிகார [illegible]

--இவ்விதமாக, முன்னைய அரசின் காலத்தில் இடம்பெற்ற அதிகார துஷ்பிரயோகம், ஒழுங்கீனம், ஊழல்கள் பற்றி உருக்கமாக நேற்றுக்காலை எடுத்துரைத்த திரு. ஏ. ஸி. டி. சொய்ஸா இந்த விசாரணைக் கமிஷன் மிகவும் நுணுக்கமாகப் பரிசீலனை செய்யவேண்டும் என்றும், சில அரசாங்க உத்தியோகத்தர்கள், அந்தரங்கமாக சாட்சியமளிக்க விரும்புகிறார்கள் என்றும் கேட்டுக்கொண்டார்.

இன்று தொடரும்

எந்த அமைச்சைப்பற்றி தாம் முதலில் கூறுவார் என்பதை நாளை (புதன்கிழமை) தெரிவிப்பதாகத் திரு சொய்ஸா நேற்றுக் கூறினார்.

ஜனதிபதி விசாரணைக் கமிஷன் மீண்டும் இன்றுகாலை கூடுகிறது. விசாரணைகளைக் கவனிப்பதற்காக வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களைச் சேர்ந்த பல நிருபர்கள் வந்துள்ளனர். (ப)

மாவை முருகன் ரதோற்சவம் இன்று

(மாவிட்டபுரம்)

சரித்திரப்பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பஞ்சரதோற்சவவிழா இன்று மிக விமரிசையாக நடைபெறுகிறது.

மேற்படி ஆலய வருடாந்த உற்சவம்கொடியேற்றத்துடன் ஆரப்பமாகி தொடர்ந்து 23 தினங்கள் நடைபெற்று இன்று பஞ்சரதோற்சவம் நடைபெறுகிறது.

நாட்டின் பலபாகங்களிலு மிருந்து இந்த உற்சவத்தில் பங்குபற்றவரும் பக்தர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அன்னதான மடத்தில் இன்று முழுவதும் அன்னதானம் செய்ய தொழிலாளர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பஞ்சரதோற்சவத்தை யொட்டி பல பறவைக்காவடிகளும். ஆட்டக்காவடிகளும் இன்று ஆலயத்தை வந்தடைய உள்ளன.

நாளைய தினம் மாலை ஆலய மூர்த்திகள் கிரிமலைக்கு எழுந்தருளி ஆடிஅமாவாசை தீர்த்தவிழா நடைபெறவுள்ளது. (உ)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

சி. பொன்னம்பலம் வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்தியிலுள்ள 24-ம் இலக்க மேல் மாடியுடன் கூடிய கடை 3 17/24 குளி விஸ்தீரணமுள்ளது. உடனடி விற்பனைக்குண்டு. வாங்க விரும்பும் விலையை தெரிவிக்கவும். M. M. அப்துல் காதர், 38, முஸ்லீம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 9939

2-8-78 புதன் மாலைதொடக்கம் அடுத்த நாள் வியாழன் மத்தியானம் வரை கிரிமலையில் ஆடி அமாவாசை தீர்த்த திருவிழாவில் மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் எமது விளம்பர விற்பனை வாகனத்தில் சகாய விற்பனை நடைபெறும். மேலுறைகளை சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து இனம் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம், மில்க்வைற் -யாழ்ப்பாணம். 9941

ஏர்சிலோன் லிமிட்.

யாழ்ப்பாணம்.

கேள்வி அறிவித்தல் சம்பந்தமாக 28-7-78; 30-7-78-ந் தேதிய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த விளம்பரங்களில் 75 ரூபாய் கட்டணவிகிதம் என வெளிவந்தது தவறு.

வாகனம் தேவைப்படும் தேதி - ஆகஸ்ட் 15-ந் தேதி விண்ணப்பம் முடிவுறும் காலம் 1978 ஆகஸ்ட் 10-ந் தேதி.

மேல் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :-

நிலைய முகாமையாளர்,
ஏர்சிலோன் லிமிட்டெட்,
இல. 17, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி ; 288
9944

விற்பனைக்கு

முருக்கங்கல்லுப் பவுடர், சிப்பித்தூள், சுண்ணும்பு போதியளவு உண்டு. செல்லம்ஸ் லிம்ஸ் ரோன் பவுடர் இன்டஸ்றீஸ், புங்குடுதீவு - 1. 9935

"வேகத்துடன் விவேகமும் வேண்டும்

இளைஞரின் எழுச்சியை பக்குவத்துடன் செயற்படுத்துவது என்கடமை"

புங்குடுதீவில் 'அமிர் உரை

(வேலணை)

"தமிழினத்தின் இன்னல்களைக் களைவதற்கு உழைக்கும் உற்சாகத்தை நாம் நாளுக்கு நாள் பெற்றுக்கொள்ளவேண்டும். இன்றைய சூழ்நிலையில் அரசின் போக்குகளை அவதானித்து நம்முடைய நோக்கத்தை இலக்கை அடைவதற்கு வேண்டிய வேலைகளைச் செய்துகொள்ள வேண்டும். உணர்ச்சிக்கொந்தளிப்புள்ள தம்பிமார்களின் துடிப்பினை நான் அறிவேன். அந்தத் துடிப்பின் சக்தியை வீணுக்காது விவேகத்தோடு செயல்படச் செய்யவதும் வேண்டியதும் என்னுடைய கடமை"

மேற்கண்டவாறு புங்குடுதீவு பெருங்காடு கந்தசாமி கோவிலுக்கருகாமையில் நடந்த "களம் பல கண்ட தளபதி அமிர்தலிங்கம்" என்னும் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர்.

திரு. நாக. பத்மநாதனின் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசியதாவது "தந்தை செல்வாவுக்கும் எனக்கும் கருத்து வேகங்காரணமாக அபிப்பிராய பேதங்கள் உண்டாகியிருக்கின்றன. அன்றைய எனது வாலிபத்துடிப்பு எதையும் உடனடியாகச் செய்யவேண்டுமெனத் தூண்டியது. அன்று தந்தை செல்வா நிதானமாகவும் அமைதிபாகவும், என்னை வழி நடத்தாதிருந்திருந்தால் இயக்கத்தின்போக்கே விபரீதமாகியிருக்கும்" என்றார்.

யாழ். எம். பி. பேச்சு

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசும்போது "தளபதி அவர்களின் வாழ்க்கை வரலாற்றுநூல் ஈழத் தமிழர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். ஒரு இயக்கத் தலைவனின் சரித்திரம் பல பாடங்களை புகட்டக்கூடியது. எதிர்கால நடவடிக்கைகளுக்கு இறந்த காலச் சரித்திரங்கள் உதவுவதுபோல் எழுச்சியுற்ற இனத்திற்கு விழிப்புமிக்க தலைவனின் வரலாறு வழிகாட்டக் கூடியது" என்றார். திரு. ஆ. நா. கருணைந்தசிவம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நூலினை வெளியிட்டுவைத்து செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் பேசும்போது தளபதி 'அமிரி'ன் வரலாறு களங்களைக் கண்டதோடு களங்களைக் காண வேண்டியிருக்கிறது. இலிவரும் காலங்களில் தளபதியின் நிதானமே நமக்கு விடிவைத் தரக்கூடியது" என்றார்.

விழாவைத் தொடக்கி வைத்துத்திரு பண்டிதர் கா பொ இரத்தினம் எம். பி. பேசுகையில் "தொண்டுகள் செய்தவர்களின் வரலாறு வெளிவருவது மகிழ்வைத் தருகிறது. இனத்தின் உரிமைகளை பெற்றுக் கொள்வதில் இருக்கின்ற சிரமங்களைப் புரிந்துகொள்வதில் அதற்குரிய வெல்லும் வழிகளையும் தெரிந்து வைத்திருப்பவர் தளபதி அமிர்தலிங்கம். அவருடைய பாதையில் நாம் செல்லவேண்டும்" என்றார்.

பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை அமிருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். கோவை மகேசன், புலவர் ஈழத்துச் சிவானந்தன் சட்டத்தரணி எஸ். கே. பகேந்திரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. சி. தியாகராசா உட்பட ஆறு பிரமுகர்கள் சிறப்புப் பிரசிகளை பெற்றுக்கொண்டனர். திருமதி அமிர்தலிங்கம் வித்துவான் சி. ஆறுமுகம் நா. தருமலிங்கம், சு. குணரெத்தினம், க. பரராசசிங்கம், நா. பாலச்சந்திரன் நா. சுந்தராசன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள். (உ)

"சிரமதானப்பணியிலும்

சனசமூக நிலையங்கள் ஈடுபட வேண்டும்"

-- திருநாவுக்கரசு எம். பி.

(பண்டத்தரிப்பு)

'சனசமூக நிலையங்கள் பத்திரிகைகள் படிக்கும் நிலையங்களாக மட்டும் இயங்காமல் பொதுப்பணிகளிலும் ஈடுபட வேண்டும். தொகுதியில் நடைபெறும் சிரமதான வேலைகளில் நிலைய உறுப்பினர்கள் ஆர்வமுடன் ஈடுபட முன்வரவேண்டும். குளங்கள் புனரமைப்பு செய்யப்படுவதும் கைத்தொழில் திட்டங்கள் நிறுவப்படுவதும் பொது மக்களின் நலன் கருதி செய்யப்படுபவைகள் என்பதை சகலரும் நன்குணர்ந்து இவற்றிக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிப்பது தலையாய கடமையாகும்.'

இவ்வாறு வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தர். திருநாவுக்கரசு வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நிலையத் தலைவர் ஆசிரியர் எஸ். மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர் நிலையத்தின் புனரமைப்புக்கு தேவையான நிதியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுவதாகவும் அப்பிரதேசத்திற்கு மின்சார வசதி ஏற்படுத்தித் தர விருப்பதாகவும் தெரிவித்தார்.

நிலைய செயலாளர் திரு. த. உகந்தாதன், பொருளாளர் திரு. சி. தவராஜா, பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ந. நாகராஜா ஆகியோரும் உரையாற்றினர்கள், (உ)

நிதி ஒதுக்கீடு

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள பல பொது மயானங்களைப் புனரமைப்புச் செய்வதற்குப்பன் முகபடுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கப்பூது சுடலை, கிராய்ச் சுடலை, பூவரசம்பிட்டிச் சுடலை, ஆகியவற்றிற்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

தமிழ்மறைத் தேர்வுப் போட்டி

(வண்ணார்பண்ணை)

1979-ம் ஆண்டுக்கான தமிழ் மறைத் தேர்வுப் போட்டியொன்றினை நடத்த தமிழ் மறைக் கழகம் முடிவு செய்துள்ளது.

1979-ம் ஆண்டு ஜூலை மாதம் மூன்றாவது சனிக்கிழமை அகில இலங்கை ரீதியில் இத் தேர்வை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக இக் கழகத்தின் செயலாளர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள், இலக்கிய சங்கங்கள், பொது சேவை மன்றங்கள் போன்ற வற்றினிடையே இப்போட்டித் தேர்வுகளை நான்கு பிரிவாக நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

போருக்கு தயாராகுமாறு சீன இராணுவத்துக்கு உத்தரவு

பீக்கிங், ஆக. 1

சீன இராணுவத்தினரைப் போருக்குத் தயாராகுமாறு சீன சிரேஷ்ட உதவிப்பிரதமர் திரு. டென்-சியா-பெங் உத்தரவிட்டுள்ளார்.

சீன இராணுவப் படையைச் சேர்ந்த சகலரும் நாட்டை நவீனமுறையில் அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டுமென்றும் திரு. பெங் தெரிவித்துள்ளார். (இ)

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, MB / 14694.

1. சுப்பிரமணியம் கனகராசாவும் பெண் வழக்காளி
2. ருக்குமணியும்-சிறுபிட்டி

எதிராக

1. விசுவனுதர் முத்து நவமணி
2. முத்து நவரத்தினம்
3. முத்து சிவலிங்கம்-இல: 303, பலாலி ரோட்டு திருநெல்வேலி தெற்கு.

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு/14694ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 2 துண்டுக்காணிகளை 1978ம் ஆவணி மீ 18ம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

நீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 6500/-ம் 6-1-75 தொடக்கம் 1-7-76 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 14% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 656/80ம் செலவில் ரூபா 200/- நீக்கி.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை "செம்மண் கிடங்கு" நி. பர. 2. பதிவு D 178/181 டி செம்மண் கிடங்கு நி. பர. 1ம் குளி 16ம் இருவகையும் டி ஒரே காணியாக நி பர. 3ம் குளி 16ம் வீடும் பயிர்வகைகளும் வடக்கெல்லைக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும், ஆனல் டி கிணற்றில் இக்காணிக்கூடாக தெற்கெல்லைக் காணிக்குரிய பங்கை பாவிப்பதற்குரிய வழமையான பாதை வழிவாய்க்கால் பாவிப்புரித்து புற நீங்கலாக. இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு அன்னலிங்கம்பெண் செல்லம்மாவின் உரிமைக்காரருக்கும் சண்முகநாதனுக்கு முரிய வாதனம். மேற்கு முத்தையா பெண் தையல்முத்துவுக்கும் சண்முகநாதனுக்கும் வினுசித்தம்பி வேலுப்பிள்ளைக்கு முரியவாதனம், தெற்கு விசுவனுதர் கதிரவேலுவுக்கும் விசுவனுதர் கனகரத்தினத்துக்குமுரிய ஆதனம்- இதடங்கலும்.

2. டி இறை "உடையாள் தோட்டமும் மறுபிரிவுகளும்" நி.பர. 4ம பயிர்வகைகளும். எல்லை கிழக்கு சரவணமுத்து பெண் சிவக்கொழுந்துவினுதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு இராசையா மகள் புவனேஸ்வரியினுதனம், தெற்கு பரமனுதன்பெண் தில்லைப்பிள்ளையினுதனம்.பதிவு D185/103.

ஜே. ஏ. எட்வேட்,
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.
1-8-78. 9934

தமிழ் நாட்டில் எக்காரணம்கொண்டும் மதுவிலக்கு ரத்தாகாது

முதல்வர் எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, ஆக. 1

தமிழ் நாட்டில் எக்காரணம் கொண்டும் மதுவிலக்கு ரத்துச் செய்யப்படமாட்டாது. மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் செய்வதற்கு புதிய சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இச்சட்டம் அமுல் செய்யப்பட்டதும் அதன் துணை கொண்டு தமிழ்நாட்டில் மதுவிலக்கு முற்றுக நடைமுறைப் படுத்தப்படும்

இவ்வாறு தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் தஞ்சாவூரில் நடைபெற்ற மாநாடொன்றில்பேசுகையில் கூறினர்.

இன்னும் ஓராண்டு காலத்தில் தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு அமுல்செய்யப்பட்டு விடுமென்றும் தெரிவித்த எம். ஜி.ஆர். விரையில் அமுல்செய்யப்படும் புதிய சட்டம் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை முற்றுக ஒழித்துவிடுமென்றும் கூறினர்.

இதே மாநாட்டில் பேசிய தமிழ்நாடு கவர்னர் திரு பிரபுதாஸ் பட்வாரி, எம்.ஜி.ஆரின் அரசு மேற்கொள்ளும் மதுவிலக்கு நடவடிக்கைகளைப் பெரிதும் பாராட்டினர். (இ)

ஈழநாடு
The Eelanaadu

கைத்தறி வாரம்

கைத்தறி நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்குப் புடவைக் கைத்தொழில் அமைச்சு தீவிர நடவடிக்கை எடுத்துவருகிறதென ஒரு செய்தி கூறுகிறது.

இந்தியாவிலிருந்து நவீன கைத்தறி இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சு முன்வந்துள்ளதாம்.

மாவட்டங்கள் தோறும் கைத்தறி நெசவாலைகள் நிறுவி நவீன கைத்தறி இயந்திரங்களின் உதவியுடன் கைத்தறி நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்வதன்மூலம் சுமார் பதினாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கலாமென அமைச்சு கருதுகிறது.

கைத்தறி உற்பத்தியை அபிவிருத்தி செய்வதன் மூலம் வேலைவாய்ப்பளிப்பது மட்டுமல்ல உள்ளூர்த் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும்.

இந்தநோக்கத்துடன்தான் டாக்டர் தகநாயக்கர் முன்னர் நாடு முழுவதும் கைத்தறி நெசவுநிலையங்களைத் திறந்தார்.

ஆனால் அவை சிறிது காலத்தின்பின் மூடவேண்டிய நிலை ஏற்பட்டது.

கைத்தறிப் புடவைகளை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நெசவுநூல்வெளி நாடுகளிலிருந்தேஇறக்குமதி செய்யும் நிலைதான் இன்னுமிருக்கிறது.

நெசவுநூல் தட்டுப்பாடு காரணமாக கைத்தறி நெசவாளர் பல நாட்களுக்கு வேலையற்றிருக்க வேண்டியுள்ளது.

இதுமட்டுமல்ல இங்கு உற்பத்தி செய்யப்படும் புடவைகளை சந்தைப்படுத்துவதற்கும் சரியான ஏற்பாடுகள் இல்லாததும் நெசவாளரின் கஷ்டங்களுக்கு மற்றொரு காரணம்.

வெளிநாடுகளிலிருந்து புடவைகளும் துணிகளும் தாராளமாக இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் உற்பத்திப் புடவைகளும் துணிகளும் தரத்தில் அவைகளுடன் போட்டியிட முடியாதிருக்கின்றது.

உள்நாட்டில் பருத்தி உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்படுவதுடன் நூல் நூற்கும் தொழில் குடிசைக் கைத்தொழில் அடிப்படையில் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியது அவசியம்.

இந்திய விடுதலைப் போராட்டத்துக்குத் திட்டம்வகுத்த காந்திஅடிகள் அந்நிய துணிகளைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்தை ஆரம்பித்து அதேசமயம் நூல் நூற்றுக் கைத்தறி ஆடைகளை உற்பத்தி செய்யும் கதர்இயக்கத்தையும் ஆரம்பித்தார். இதன்மூலம் நாட்டில் பலருக்கு வருமானம் கிடைக்கவும் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும் வாய்ப்புக் கிடைத்ததுமட்டுமல்ல தேசப்பற்றையும் மக்களுக்கு ஊட்டினார்.

நமது நாடு கஷ்டமில்லாமல் விடுதலை பெற்றதால் அன்று தொடக்கம் இன்று வரை மக்களிடம் அந்நிய மோகமே குடிகொண்டிருக்கிறது.

சிலதினங்களுக்குமுன் ஆவரங்காலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் பேசிய ஒரு இளைஞர் கைத்தறி ஆடை உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியதுடன் கைத்தறிவாரம் ஒன்று அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு நல்ல யோசனையைத் தெரிவித்தார்.

வெளிநாட்டுப் புடவைகள், துணிகள் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது நாடு முழுவதும் கைத்தறி வாரமும் அனுஷ்டிக்கப்படுவது கைத்தறி உற்பத்திக்கு ஊக்கமளிக்க உதவும்.

தமிழ்நாட்டில் தீபாவளிக்கு முன்னதாகக் கைத்தறி வாரம் அனுஷ்டிக்கப்படுவதுபோல் இங்கும் அனுஷ்டிப்பது நல்ல பயன் தருமென்று எதிர்பார்க்கலாம்.

தென்னிலங்கை அரசு ஊழியர் பயிற்சிக்காகவடபகுதிஅனுப்பப்படுவர்

வேலணையில் மந்திரி மொண்டேகு தகவல்

(வேலணை)

'நான் இந்தக் காரியாலயத்தின் புனிதத் தன்மையையும், சுத்தத்தையும் பார்த்தவுடனேயே இங்கு நிர்வாகம் மிகவும் ஒழுங்காக இருக்கும் என்பதனை உணர்ந்தேன்.' வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தை பார்வையிட்ட பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மொன்டேகுஜயவிக்கிரமா மேஜர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'உங்கள் அன்பும், மகிழ்வுடன் எம்மை வரவேற்ற பண்பும் எம்மைக் கவர்ந்து விட்டது. தென் பகுதியிலிருந்து நிர்வாக உத்தியோகத்தர்களை இப்பகுதிக்குப் பயிற்சிக்காக அனுப்ப நாள் முடிவு செய்து இருக்கிறேன். அவர்கள் இங்கும் வந்து உங்கள் பண்பாடு கலை கலாச்சாரம் முதலியவற்றை அறிந்து பகிர்ந்து கொள்ள வேண்டும். திறமையான ஒரு அரசாங்க அதிபரை நான் உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். இளைஞரான அவர் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வார்' என்றார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. தம்பிமுத்து அமைச்சரை வரவேற்றுப் பேசினார்.

அமைச்சருடன் அமைச்சின் காரியதரிசி திரு. டி. பி. ஐ. எஸ். சிறிவர்த்தனவும் வந்திருந்தார்.

அமைச்சரும், காரியதரிசியும் காரியாலய வளவில் இரு மாங்கன்றுகளை நாட்டினர்.

அமைச்சரும் மற்றையோரும் நயினை நாகபூஷணி அம்பாளையும், பௌத்த விகாரையையும் சென்று தரிசித்தனர். அமைச்சர் வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'பன்முகப் படுத்தப்பட்ட நிர்வாகத்தின்கீழ் அரச ஊழியர்களின் பங்கு கூடுதலாக இருக்கும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட அமைச்சர் பொறுப்பாக இருப்பார். உங்கள் மாவட்டத்தின் மாவட்ட அமைச்சர் யாராக இருப்பார் என்று எனக்குத் தெரியாது. இது முற்றிலும் ஜனதிபதியின் கையிலேயே உள்ள விடயமாகும். உங்களுக்கு வரப்போகும் மாவட்ட அமைச்சரின் கீழ் நீங்கள் உங்கள் பங்கை சரியாகச் செயய வேண்டும்.

ஏற்கனவே உள்ள 22 மாவட்டங்களுடன் இன்னும் இரண்டு புதிய மாவட்டங்கள் அமைக்கப்படும். இவை கம்பகா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களாகும். இப் பகுதி உதவி அரசாங்க அதிபர் மக்களுக்கும் தேசிய பேரவை உறுப்பினருக்கும் அரசாங்கத்திற்கும் திருப்தி அளிக்கக் கூடிய வகையிலே செயல் படுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் திருப்தியையும் தருகின்றது.

தென் இலங்கையில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களின் அலுவலகங்களும் இப்படி பிறந்த முறையிலே இருக்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். இதன் பொருட்டு இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள கூதவி அரசாங்க அதிபர்கள் இடையே ஒருவகை பரிமாறல்களை ஏற்படுத்தி ஒருவர் மற்றவரின் அலுவலகத்தைப் பார்வையிடுகின்ற வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்பது எனது விருப்பம். அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் புதியசீர் அமைப்பின்கீழ் எப்படி அலுவலகங்கள் செயல்படுகின்றன என்பதைப் பார்வையிட மறுமுறையும் இப் பகுதிகளுக்கு வரவுள்ளேன், என்றார்.

ஊர்காவற்றுறை எம்.பி. திரு. கா.பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது: மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உதவி அரசாங்க அதிபர்களையோ, அரசாங்க அதிபர்களையோ அல்லது மிகத் தூரத்திலுள்ள தனது அமைச்சுடனே தொடர்பு கொள்ள தயங்குவதில்லை. அரசாங்க ஊழியர் சிரமத்தைப் பாராட்டாது தமது கடமைகளைச் செய்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கூறினார். இவ்வரவேற்புக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் லயனல் பெர்னான்டோ, அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள் யாழ். செயலகத்தைச் சேர்ந்த மேலதிகாரிகளான திரு தருமபாலன், திரு. பஞ்சலிங்கம், சண்முகசுந்தரம், கணக்காளர், திரு. திருநாவுக்கரசு, தலைமைக் காரியாலய மாவட்டகாணி அதிபர் திரு. கணேசநாதன் அலுவலக உதவியாளர் திரு. கணேஸ்ும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

அமைச்சரையும் அவருடன் வந்த செயலாளர் மற்றும் மேலதிகாரிகளையும் உதவி அரசாங்க அதிபர் வரவேற்றார். அமைச்சருக்கு மாலை குட்டி திலகமிட்டபின் அமைச்சரின் விஜயத்தின் ஞாபகர்தமாக கனிமரக் கன்றுகளை அமைச்சரும் செயலாளரும் நாட்டினர். இவர்கள் எல்லோரும் அலுவலகத்தினுள் சென்று அலுவலகத்தை பார்வையிட்டனர். இவர்களை வரவேற்றுப் பேசுகையில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து தமது அலுவலகத்தை அமைச்சரும் செயலாளரும் பார்வையிட ஏற்பாடு செய்தமைக்காக யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு நன்றி கூறினார். நன்றியைத் தொடர்ந்து பேசுகையில் தமது பகுதி நயினாதீவு, புங்குடுதீவு, லைடன் தீவுகளின் பகுதிகளான வேலணை சரவணை அல்லைப்பிட்டி ஆகியவற்றையும் மண்டைதீவையும் உள்ளடக்கிய பகுதியாகும் என்றும். இங்குவாழும் மக்கள் விவசாயம், வியாபாரம், மீன்பிடித்தல் ஆகிய தொழில்களை செய்பவர்கள் என்றும் கூறினார். நல்ல தண்ணீர் இல்லாமையே இப்பகுதியின் பெரும் குறை என்றும் குறைகளை நிவர்த்திக்க எல்லா முயற்சிகளும் எடுக்கவேண்டியது மிக அவசியமென்றும் மழைத் தண்ணீரைச் சேகரிப்பதற்காக குளங்களை ஆழமாக்குகின்ற முயற்சியில் சிரமதான வேலைகளை பெருமளவில் மேற் கொண்டுவருகின்றார்கள் என்றும் கூறினார் தமது அலுவலக ஊழியர்களும் கிராமசேவையாளர்களும் மற்றும்வெளிக்கள உத்தியோகத்தர்களும் ஒன்று சேர்ந்து இயங்கி மக்களுக்கும் எம். பி. வுக்கும் திருப்திஅளிக்கக் கூடிய வகையில் கடமையாற்றுகின்றார்கள் என்றும் அரசாங்க சேவையின் உயர்ந்த இலட்சியங்களைப் பின்பற்றி நாட்டிற்கும் மக்களுக்கும் நற்பணிபுரிவோம் என்றும் உறுதியளித்தார். (உ)

இன்றைய இராசிப்பலன்

ஆடிமாதம் 17-ந் திகதி
புதன்கிழமை
(2-8-78)
சோதிடக் கலாநிதி
திருமலை கு. வேலுப்பிள்ளை

மேடம் :- மதிப்பு உயரும் பொதுமக்கள் ஆதரவும் கிடைக்கும், புத்திரரால் புகழுமுண்டு, புதினமும் கேட்பீர்.

இடபம் :- துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம் போடும், துணைவரின் உடல்நலம் கெடும், பணமும் பெருமளவில் செலவாகும்.

மிதுனம் :- அவசரப் புத்தியினால் விபரீதங்கள் விளையலாம், கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும், பொறுமை நன்று.

கடகம் :- துள்ளிவரும் வெள்ளிப்பணம் தொடர்புகளை பெருக வைக்கும், தள்ளிவைத்த மக்கள் உம்மை அள்ளி அணைத்திடுவர்.

சிம்மம் :- இருள் மண்டிக் கிடக்கும், இன்று ஏமாற்றம் தாக்கும், குடும்பத்தில் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

கன்னி :- இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும், சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

துலாம் :- அரசியலில் ஆர்வம் பிறக்கும். பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும், இதன்மூலம் சிரமங்களும் தென்படலாம், சிலருக்கு எதிர்பாராத வகையிற் அதிர்ஷ்டமும் கிடைக்கும்.

விருச்சிகம் :- உறவாடிக் கெடுப்பதற்குப் பகையாளிகள் வருவர், உற்சாகம் குன்றும்; பிரயாணத்தின்போது பொருள் தவறக் கூடும்.

தனுசு :- குடும்ப வழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும், நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும், காதல் விவகாரங்களுக்கும் இடம் உண்டு.

மகரம் :- செய்தொழில் தளர்ச்சி ஏற்படும், சதிசெய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர், பிரயாணத்தை தவிர்க்கவும்.

கும்பம் :- தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள், சுற்றுலாவில் மதிப்பு உயரும், புண்ணியஸ்தலமொன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம்.

மீனம் :- தங்கக் குணம் மேலிடும். தக்க மதிப்பும் கிடைக்கும், இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும், உழைப்பினால் பலனும் உற்சாகமும் பிறக்கும், முன்னேற்றமான தினம்.

ஊக்கமும் உற்சாகமுமின்றி அரிய செயல் எதுவும் நிகழ்ந்ததில்லை.

---எமர்சன்

"ஈழத்தமிழர்கள் பெருமைக்குரியவர்கள்"

-- செ. இராசதுரை

(ஆவரங்கால்)

"உலகில் ஏழரைக்கோடி தமிழ் மக்கள் உள்ளனர். ஆனால், தமிழருக்கு ஒரு தாயகம் தேவை என்பதை முதலில் உலகுக்கு உணர்த்தியவர்கள் இலங்கைத் தமிழ் மக்கள் தான்" ஈழத் தமிழ் மக்கள் பெருமைக்குரியவர்கள் என்று மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை கூட்டணி மாநாட்டு கடைசி நாள் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"தமிழ்பேசும் இனம் தமிழ் ஈழத்தை அடையும் கடைசிக் கட்டத்தில் இருக்கிறது. இளைஞர்கள் மிகவும் பொறுமையுடன் இப்பொழுது செயல்படவேண்டும். இளைஞர்களுக்கு வெளிநாட்டு மோகம் பிடித்திருக்கிறது. விரைவில் இவர்கள் திரும்பிவிடுவார்கள். அப்போது இங்கு காணிகள் இருக்காது, நமது காணிகள் சிங்களவர்கையில் இருக்கும். இன்னும் பாகிஸ்தானைப் பெற்றுக் கொடுக்க முனைந்தபோது பாகிஸ்தானைப் பெற்றுத்தாருங்கள் என்றுதான் கோஷம் எழுந்ததேதவிர எப்படி பாகிஸ்தானைப் பெறுவீர்கள் என்று ஜின்னாவை எவரும் கேட்கவில்லை. அமிர் ஓர் இலட்சிய வீரர். அவரது வரலாறு, இயக்கத்தின் வரலாறு. அவர்மீது நம்பிக்கைவைத்து தமிழ் ஈழம் காண்போம்" என்றும் கூறினார்.

ஆவணித் திருவிழா

(உடுப்பிட்டி)

கின்னமடு வருடாந்த ஆவணித் திருவிழா இம் மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ளது. இத் திருவிழாவை யாழ். மறை மாவட்ட ஆயர் அதி. வந். பீ. தியோகுபிள்ளை ஆண்டகை நிறைவேற்றி வைப்பார்.

கத்தோலிக்க ஆசிரியர் பயிற்சி

(உடுப்பிட்டி)

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படும் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான மூன்று மாத கால பயிற்சிக்கு கத்தோலிக்க சமய பாட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களை மறைக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார். (உ)

'சமுதாயம்பூரணத்துவம்பெற கலை வளர்ச்சியும்வேண்டும்'

-- சாவகச்சேரி எம். பி.

(மட்டுவில்)

''ஒரு சமுதாயம் தனது பூரணவளர்ச்சியை அடைய வேண்டுமென்றால், அதற்கு பொருளாதாரம், அரசியல் உரிமைகள், வசதிகள் இருந்து விட்டால் மட்டும் போதாது. அந்தச்சமுதாயம் தமது பாரம் பரிய கலை, கலாச்சாரங்களிலும் வளர்ச்சியும், முதிர்ச்சியும் அடையவேண்டும்.''

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சாவகச்சேரி டிறீபேக் கல்லூரி திறந்த கலையரங்கில் நாட்டியக்கலாமணி திருமதி வசந்தா டானியலின் நாட்டியக் கலாலயத்தின் பத்தாவது ஆண்டு பூர்த்திவிழாவில் பேசுகையில் கூறினர்.

திருமதி வசந்தா டானியலும், அவரது மாணவியர்களும் இந்தவிழாவில் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தினர். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் அவரது பாரியார் திருமதி இரகுபதி நவரத்தினமும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. பூ. வெற்றிவேலுவும் அவர் பாரியாரும் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டனர். திரு. நவரத்தினம் எம், பி. தொடர்ந்து கூறியதாவது: ''நாம் புதியதொரு சமுதாயத்தைக்கட்டியெழுப்ப அதன் அரசியல், பொருளாதார உயர்ச்சிகளைப்பெற அயராது உழைத்து வருகிறோம். ஆனால் எமது சமுதாயம் சகல துறைகளிலும் வளர்ந்து பூரணத்துவமடைய வேண்டும். அதற்கு கலை, கலாச்சார வளர்ச்சியும் அவசியம். இதை வளர்ப்பதில் நாட்டியக்கலாமணி திருமதி வசந்தா டானியல் முழுமூச்சாக உழைத்து வருகிறார். அவர் தொடர்ந்தும் தமது கலைச்சேவையைச் செய்யவேண்டும் என்றார்,

திரு. பூ. வெற்றிவேலு பேசுகையில்; பத்து ஆண்டுகளாக ஒரு கலாலயம் நமது நாட்டின் பாரம்பரியக்கலையை வளர்த்து வருகிறது. இதில் ஆரம்பத்தில் 5,6மாணவர்கள்மட்டுமே இருந்தனர். இப்பொழுது பல நூற்றுக்கணக்கில் மாணவர் தொகை பெருகியுள்ளது. அது மட்டுமல்ல பணவசதியற்ற ஏழைகள் கூட கலைவளத்தில் சிறந்துள்ளனர்'' என்றார்.

நாட்டியக்கலாமணி திருமதி வசந்தா டானியலின் 'தசாவதாரம்' நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது. (உ)

கிறிஸ்தவக் கல்லூரியை நமது பல்கலைக்கழகங்கள் பின்பற்றுமா?

கலைஞருடன் வி. பி.

வி.பி.யை திரு. சந்திரன் ஜெயபால் கலைஞருக்கு அறிமுகப்படுத்துகிறார். அவரைப் புன்சிரிப்புடன் வரவேற்றுரையாடும் கலைஞருடன் தமிழர் பிரச்னைகள்பற்றிக் கூறி செந் தமிழர் இயக்கப் பிரசுரங்களைக் கையளித்தார் வி.பி. இச் சந்திப்பின்போது முன்னாள் இலங்கைத் திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மணவைத்தம்பி, திரு. சுப்பு எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தாம் முன்பு கல்விகற்ற சென்னை கிறிஸ்தவக்கல்லூரியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலில் அங்கு சென்றார். வி. பி.

இப்போது அக்கல்லூரி வளர்ச்சி பெற்றுப் பூரணசுதந்திரமுடைய பல்கலைக்கழகக் கல்லூரியாக வளர்ந்துள்ளது. அப்போது 'ரியூட்டராக' இருந்த டாக்டர் ஏபல் என்ற கல்விமான் இப்போது அதிபராக அங்கு விளங்குகிறார். வி. பி. முன்பு சேவைசெய்த பழைய தாம்பரம் சேரிக்கும் சென்று பார்வையிட்டார். அங்கும் சிறு பாடசாலையாக மாணவர் ஆரம்பித்த பாடசாலை இப்போது உயர்நிலைப் பாடசாலையாக வளர்ந்திருந்தது. இந்தமாற்றங்கள் வி.பி.க்கு மிக்க மகிழ்ச்சியளித்தன. முன்பு தாம் பாடம் சொல்லிக் கொடுத்த சிறுவர்களுள் சிலராவது பட்டதாரிகளாகவும் உயர்அதிகாரிகளாகவும் கடமைபுரிவதைக் கேள்வியுற்றஇவர் மேலும் பரவசத்திலாழ்ந்தார்.

முன்னாள் தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் மார்க்கம் ஆதிசேஷையர் தற்போது சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக விளங்குகிறார். இவர் ஒரு பொருளாதார, வரலாற்றுப் பேராசிரியர். வெளிநாட்டில் படித்தவர். தமிழே பேச வராது. எனினும் தமிழ் மீதுள்ள பற்றுக் காரணமாக ம. பொ. சி. விழாவில் பேசுகையில் தமிழை ஆங்கில உச்சரிப்புடன் வாசித்தமை அனைவர்க்கும் வியப்பையும் மகிழ்ச்சியையும் தந்தது.

வி. பி.யுடன் சகமாணவராக விளங்கிய திரு. ரெங்கபேட் குருசாமி என்பவர் கல்லூரியின் நிர்வாகம் முழுவதற்குமே பொறுப்பாக உள்ளார். முன்பு தமிழ்த்துறை விரிவுரையாளராக இருந்த திரு. லேலாயும் இப்போது தமிழ்த்துறை தலைவராக உள்ளார். வி. பி யைக் கண்டதும், உடனே அவர் அடையாளம் கண்டு அனைவருக்கும் அறிமுகப்படுத்தினர். 'என்னை மறவாமல் பார்க்க வந்திங்களே' என்று கூறினர்.

பாரதத்தில் பன்னிரு நாட்கள்! (5)

வி. பி. இங்கு முன்பு படித்தபோது இவரது வர்க்க அரசியல் சிந்தனைகளைப் பல கல்லூரித் தொழிலாளர் அறிந்து இவர்மீது நன்மதிப்பு வைத்திருந்தனர். இவர் வந்ததைக் கேள்வியுற்றுப் பலர் விரைந்துவந்து இவருடன் அளவளாவிக் கண்கலங்கி நின்றனர். கல்லூரியின் வளர்ச்சியைச் சுற்றிப்பார்த்தார் வி. பி.

கல்லூரிக்கென ஒரு மாதிரிப்பண்ணை சுமார் 100 ஏக்கரில் அமைத்துள்ளது. இங்குள்ள மாணவர்களின்விவசாயத் துறைப் படிப்பிற்கென்றே இது அமைக்கப்பட்டதாம். கோழி, பன்றி, ஆடு, மாடு முதலிய கால்நடைகள் வளர்ப்புடன் மிருகவைத்தியம், விவசாயம் போன்ற துறைகள் கற்பதற்கும் இப்பண்ணை பெரிதும் உதவிபுரிகின்றது. அயல்கிராமங்களுடன் இக்கல்லூரியின் பண்ணையினர் நெருங்கியதொடர்பு வைத்து கிராமவாசிகளுக்கு நவீன விவசாய முறைகளையும் அறிவியல் நுட்பங்களையும் போதித்து வருவது வி. பி.யைப் பெரிதும் கவர்ந்தது. இவ்வாறு எமது நாட்டுப் பல்கலைக் கழகங்களும் பகுதிமக்களின் வாழ்வுடன் ஒன்றிச் செயலாற்றுதலில் எவ்வளவு நன்முக இருக்கும் என வி. பி. எண்ணினர். அப்போதுதான் பல்கலைக்கழகக் கல்வி நாட்டின்பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து உதவமுடியும் என்கிறார் வி. பி. கிராமத் தொண்டர்கள், படிப்பை முடித்துவிட்டு வேலையற்று இருப்போர், விவசாயிகள், விவசாயப்பட்டதாரிகள் என்று பலதரப்பட்டவர்களும் இப்பண்ணையில் வெவ்வேறு பயிற்சிபெற வாய்ப்புத் தருவது இவர் மனதைக் கவர்ந்தது. இது ஒரு நல்லமுறை. முழு இந்தியாவிலிருந்தே மக்கள் இங்கு வந்து பயிற்சி பெறுகிறார்கள். கிராம அபிவிருத்தி விஸ்தரிப்புப்போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கப்படுவது எத்தகைய நன்மையை விளைக்கும்! அயற்கிராமங்களில் உள்ளவர்களுக்குக் கால்நடை அபிவிருத்தி, செயற்கைமுறைச் சினைப்படுத்தல், நல்லினக் கோழிவளர்ப்பு போன்ற முறைகளில் எல்லாம் பயிற்சியளித்துத் தம்மைச் சூழ்ந்துள்ள பிரதேசத்தார் பொருளாதார வளம்பெற உழைக்கும் இப்பல்கலைக்கழகக் கல்லூரிபோல எமது யாழ். வளாகமும், ஏனைய வளாகங்களும் எதிர்காலத்தில் இத்தகைய திட்டங்களையும் பண்ணைகளையும் ஆரம்பித்துத் தம் பிரதேசங்களை வளர்த்தால் எப்படி இருக்கும்? எம் எதிர்கால வளம் வி. பி யின் கண்களில் நிறைந்தது. அவர் மனதில் களிப்பை ஊட்டியது. பலநோக்கங்களை ஒரேநேரத்தில் ஈடேற்றும் பண்ணையாக இது விளங்குவது நாம் நன்கு சிந்திக்க வேண்டிய விஷயம். இந்தப்பண்ணையை வெளிநாட்டவர்கள் கூட வந்து பார்வையிட்டுப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். பண்ணைப் பொறுப்பதிகாரியின் ஊக்கமும் உழைப்புமே பண்ணையின் வெற்றிக்குக் காரணம். கல்லூரிஅதிபரின் வேண்டுதலுக்கிணங்க வி. பி. அங்குள்ள 'சர்வதேச விருந்தினர் விடுதியில்' ஒருநாள் விருந்தினராகத் தங்கியிருந்தார்.

(தொடரும்)

வி. பி. யின் இந்திய பயண அனுபவங்களை கேட்டு எழுதியவர்:

இணுவை. ந. கண்முகப்பிரபு

''இன, மத பேதம்

சமுதாயம் உருவாக்க ஐ. தே. க. முயற்சி

(பரந்தன்)

இந்த நாட்டில் இன, மத பேதமற்ற ஒரு சமதர்ம தார்மீக நிலையை உருவாக்க இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி முனைந்து வருகிறது. தொழிலாளர்கள் நலனுக்காகவும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக் காவும் இந்த அரசு செய்யும் நற்பணிகளுக்கு நாமும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டியது கடமையாகிறது.''

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பரந்தன் தொழிற்சாலையைச் சேர்ந்த தேசிய தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய தேசிய தொழிலாள சங்கப் பிரதம அமைப்பாளர் திரு. அன்ரனி பெரேரா தெரிவித்தார்.

பரந்தன் தொழிற்சாலை மண்டபத்தில் நடந்த இக் கூட்டத்தில் திரு. அன்ரனி பெரேரா தொடர்ந்து பேசுகையில் ''அரசின் உத்தேச தொழிலாளர்கள் சபைகள் இந்த நாட்டிலுள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என நம்பலாம். இச் சபையின் மூலம் தொழிலாளர்கள் இதுவரை பெறமுடியாமல் இருந்த பொருளாதார சுபீட்ச நிலையை அடையும் வாய்ப்புகள் ஏற்படவுள்ளன.

ஜனாதிபதி ஜே. ஆரின் புதிய திட்டங்களில் இத்தொழிலாளர் சபைகளும் ஒன்றாகும். இத்திட்டம் எமக்கும், நாட்டுக்கும் பூரணமான வெற்றியையும், சிறப்பையும் கொடுக்க தொழிலாள வர்க்கம் அனைத்தும் எமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுத்து அரசின் புதிய திட்டங்கள செயல்பட ஆதரவு நல்க முன்வர வேண்டும்'' என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கு தொழிற்சங்கங்களின் மாவட்ட பேரவையின் தலைவர் திரு. மயில் அமிர்தலிங்கம் பேசுகையில் 'தொழிலாளர் மத்தியில் தன்னலமில்லாத தார்மீக எண்ணம் கொண்ட சேவை உணர்வையும் தொழிலாளர் ஒற்றுமையையும் நாம் ஏற்படுத்த வேண்டியது எமது முதற்கடமையில் ஒன்றாகின்றது. எமது தொழிற்சங்க மாவட்டப்பேரவை கமத் தொழிலாளர்களுடையதும் விவசாயபிரிவுகளினதும் பாரம் பரியமான பிரச்னைகளுக்கு நல்ல தீர்வுகளை காண்பதில் அதிகமான கவனத்தை செலுத்தி வருகிறது, தொழிலாளர் கட்சிபற்றிநாம் சிந்திக்கும் போது எமது நாட்டின் நலன் அபிவிருத்தி, பொருளாதார உயர்வு, தேசிய ஒருமைப்பாடு போன்றவற்றையும் நாம் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம். சக ஊழியர்களோடு அல்லது மேலதிகாரிகளோடு நாம் இலட்சிய ரீதியாக எமது போராட்டங்களை நடத்தும் போது அவை அன்புவழியிலும் தார்மீக வழியிலும் நடைபெற வேண்டும்'' என்றார்.

மேற்படி சங்கப் கிளையின் முன்னாள் தலைவர் திரு. வாதவூரன், உட்பட திரு. வை. கதிரவேலு, திரு. எஸ். ஐயம்பிள்ளை, திரு. பி. சிவநாதன், திரு. கி.த்வராசா ஆகியோரும் உரையாற்றினர்-

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. எஸ் கந்தசாமி, உப தலைவர்கள்: திரு. வி.பி. தர்மசேன, திரு சி. சண்முகராசா, திரு. கே. கிருஷ்ணபிள்ளை, செயலாளர் திரு. வை: கதிரவேலு, உப செலாளர்கள்: திரு. ஆர். மகேசுஸ்வரன், திரு. எஸ். சிவநாதன், தனுதிகாரி: திரு.எஸ். தருமநாயகம்.

ஐந்துபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவாகியது.

(வண்-நி-உ)

''விலைவாசியைக் குறைக்க

புரட்சிகர இயக்கம் ஒன்றினாலேயே முடியும்''

(உடுப்பிட்டி)

''எந்தஅரசாங்கங்களாலும் விலைவாசியைக் குறைக்க முடியாது. புரட்சிகரமான இயக்கம் ஒன்றின் மூலம்தான் நாட்டில் நிம்மதியான வாழ்வினை ஏற்படுத்த முடியும்''

இவ்வாறு டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி தலைமையில் வதிரி தமிழ் மன்றத்தில் நடைபெற்ற இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கருத்தரங்கில் பேசிய பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. குமார் டேவிட் குறிப்பிட்டார்.

திரு. குமார் டேவிட் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இலங்கையில் முதன் முதலாகத் தோன்றிய அரசியல் கட்சி லங்கா சமசமாஜக்கட்சியேயாகும். இக்கட்சிதான் இந்நாட்டில் இருந்து அந்நிய ஏகாதிபத்தியத்தை விரட்டி அடித்து விலைவாசி உயர்வை எதிர்த்து எமது இயக்கம் போராட்டம் நடாத்தவுள்ளது.

''ஜெர்மனி போன்ற நாடுகளில் நடைபெற்ற போராட்டங்களில் தொழிலாளர்களே வெற்றிபெற்றனர். இதனாலேயே அந்நாடுகள் முன்னேற்றம்பெற்று வருகின்றன. நாம் இன்று இடதுசாரி ஐக்கிய முன்னணியை விரிவுபடுத்த முயன்று வருகின்றோம். முதலாளித்துவ அரசை நாம்ஒருபோதும் அமைக்கமாட்டோம். சோஷலிச அடிப்படையிலான அரசாகவே அமையும்'' என்றார். (உ)

புனரமைப்பு

(உடுப்பிட்டி)

கரம்பன் புனித செபஸ்தியார் தெவாலயம் இப்பகுதிக் கத்தோலிக்க இளைஞர்களினால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

புதிய தபால் நிலையம்

(உடுப்பிட்டி)

அல்வாய் மேற்கு திக்கத்தில் புதிதாக உபதபால் நிலையமொன்று நிறுவப்படவுள்ளது. இவ் உபதபாற் கந்தோர் அமைவதற்கான இடத்தைத் தெரிவு செய்வதில் தபால் இலாகா உயர் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

பண்பட்ட வாழ்வுக்கு கல்வி பயன்பட வேண்டும்"

-- ரி, இராஜலிங்கம் எம். பி.

(கரணவாய்)

'பாடசாலைக் கல்வி பல் கலைக்கழகத்தைமட்டும் குறிக் கோளாகக் கொள்ளக் கூடாது ஏனெனில் உடுப்பிட்டி கல்வி வட்டாரத்திலுள்ள பதினாறு யிரம் மாணவருள் சுமார் இருநூறு பேர்வரையிலேயே பல்கலைக்கழகம் செல்லக்கூடிய தாயுள்ளது. எனவே பாட சாலைக் கல்வியானது மாண வர்கள் பண்பட்ட வாழ்வு நடத்தவும், சமூக முன்னேற் றத்தைக் கருத்திற் கொண்டு வாழவும், பெற்றோருக்குச் சுமையாக அமையாது தம் வாழ்வை அமைத்துக் கொள் ளவும் உதவ வேண்டும்'.

இவ்வாறு உடுப்பிட்டி வட் டார பெற்றூர் ஆசிரியர் சங்க சம்மேளம் நடாத்திய கருத் தரங்கொன்றில் கலந்து கொ ண்டு உரையாற்றிய உடுப் பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் குறிப்பிட் டார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. எம். குணரத்தினம் தலைமை யில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. இராசலிங்கம் எம். பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இன்று மாண வர்கள் எதிர்நோக்கும் பல் வேறுபட்ட பிரச்சினைகளுக் கும் நன்கு திட்டமிடப்பட்ட முறையில் அமைக்கப்படாத கல்வித் திட்டமே காரண மாகும். மாணவர்கள் பாட சாலையில் பெறும் கல்வி சான் றிதழ்களைப் பெறுவதற்காக மட்டும் பயன்படக் கூடாது. அவர்கள் தாம் கற்ற கல் வியை நடைமுறை வாழ்க் கையில் பயன்படுத்தக் கூடிய செயற்திறன் உள்ளவர்களா யிருக்க வேண்டும்.

தற்போது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள புதிய கல்வித் திட்டத்தை நன்கு விளக்கி செயற்பட் டால் எதிர்காலத்தில் மாண வர்களின் பெரும்பாலான பிர ச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். புதிய கல்வித் திட் டம் மாணவர்களுக்கு சிறந்த தலைமைத்துவப் பண்பைக் கற்பிப்பதால் எதிர்காலத் தில் பல சிறந்த தலைவர்களை நாம் உருவாக்கக் கூடியதா யிருக்கும்.

பெற்றோர் ஆசிரியர்களு டன் சமூக உறவை ஏற்படு த்தி அவர்களுக்கு போதிய ஒத்துழைப்பை நல்க வேண் டும். காலத்திற்கேற்ப கல்வி யில் ஏற்படும் மாற்றங்க ளைப் புரிந்து கொண்டு அதற் கேற்ப மாணவர்களைத் தயார் படுத்த வேண்டும். பாராளு மன்ற உறுப்பினர் என்ற முறையிலே என்னால் இயன்ற சகல உதவிகளையும் இப்பகுதி பாடசாலைகளின் வளர்ச்சிக்கு செய்ய ஆயத்தமாயுள்ளேன். அத்துடன் தற்போதைய வட் டாரக் கல்வியதிகாரியின் அயரா உழைப்பினால் இப் பகுதி பாடசாலைகள் குறிப் பிடத்தக்க அபிவிருத்தியடை திருப்பதையிட்டு மகிழ்ச்சி யடைகின்றேன்' என்றார்.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. கே. ஈஸ்வரபாதம் பேசுகையில், 'புதிய கல்வித் திட்டம் ஆரம் பக் கல்வி அமைப்பில் கூடிய கவனமெடுத்துள்ளது. இன, மத, சாதி, பொருளாதார பேதங்களை இலையோரின் இத யங்களிலிருந்து அகற்றக் கூடிய தாக ஆரம்பக் கல்வி அமைந் துள்ளது.

இப்படியான பெற்றூர் ஆசி ரியர் சங்கங்களுக்குமிடையே சௌஜன்ய உறவு வளர்ந்து மாணவர்களின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தக் கூடியதாயிருக்கும்' என்றார்.

இக்கருத்தரங்கில் வடமா நில விஞ்ஞானக் கல்வியதி காரி திரு. எஸ். பொன்னம் பலம், கரணவாய் பொன் னம்பல வித்தியாலய அதி பர் திரு. எஸ். தாமோதரம் ஆகியோரும் பேசினர். இறு தியில் உடுப்பிட்டி வட்டார பெற்றோர் ஆசிரியர் சங்க சம்மேளன செயலாளர் திரு. ந. பாஸ்கரன் நன்றியுரை கூறினார். (உ)

அரசின் இலவச வீடமைப்பு:

உடுப்பிட்டியில் கப்பூதூக் கிராமம் தெரிவு

(உடுப்பிட்டி)

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி பீடமேறி ஓராண்டு பூர்த்தி கொண்டாடும் முகமாக தொகுதிக்கு ஐந்து வீடுகளை வீடற்ற ஏழைகளுக்கு இலவச மாக வழங்கும் திட்டத்தின் கீழ் அரசாங்கம் உடுப்பிட்டித் தொகுதியில் கப்பூதூக் கிரா மத்தை இவ்விலவச வீடுகளை நிறுவுவதற்கு எனத் தெரிவு செய்துள்ளது.

ஒரு லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்படவிருக்கும் இந்த ஐந்து இலவச வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல்லை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகம் நாட்டிவைத்தார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகம் அடிக்கல்லை நாட்டிவைத்துப் பேசும்பொழுது, "உடுப்பிட் டித் தொகுதியிலேயே மிகவும் பின் தங் கிய நிலையில் உள்ள ஒரேயொரு கிராமம் கப்பூதுவேயாகும். இக் கிரா மத்திற்கு இவ் வீடமைப்புத் திட்டம் நிறுவப்படவேண்டிய அவசியத்தை நாம் நன்குணர்ந் துள்ளோம். இத் திட்டம் மூலம் இக் கிராமம் மின் சாரம், போக்குவரத்து முத லிய முன்னேற்ற கரமான பல வசதிகளைப் பெறக் நிலையேற்பட்டுள்ளது. இக் கிராம மக்கள் சுயஉழைப்பா லும், கடின முயற்சியாலும் முன்னேறியவர்கள். அவர்க ளுக்கு அரசாங்கம் வழங்கும் இப்பரிசை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும்" என்று கூறினர். (உ)

முற்றுகை

(உடுப்பிட்டி)

ஆசிரியர் பற்றுக்குறை நில வும் பாடசாலைகளில் வசதிக் கட்டணத்தில் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தை கல்வி யமைச்சு அமுல் செய்வதை யடுத்து உடுப்பிட்டிக் கல்வி வட்டாரத்தில் நூற்றுக் கணக் கான க. பொ. த. சாதாரண தரம், உயர்தரம் சித்தியெய் திய வாலிபர்கள் தினமும் பாடசாலைகளை முற்றுகை யிட்டு வருகின்றனர். (உ)

"நமது செயல் அனைத்தும்

நாட்டு நலனுக்கும் பயன்பட வேண்டும்"

-- யாழ். அரசாங்க அதிபர்

(வண்ணார்பண்ணை)

"இருபது வருட காலமில் லாதிருந்த தேசிய சமதர்ம தார்மீக கல்வித் திட்டம் ஒன்று எமது நாட்டில் இன்று உருவாகி வருகிறது. இதை நல்ல முறையில் நடைமுறைப் படுத்தவும், பயன்படுத்தவும் நாம் முன்வர வேண்டும்."

யாழ்ப்பாணம் மத்திய கல் லூரி மண்டபத்தில் நடந்த யாழ் மாவட்ட பெற்றூர், ஆசி ரியர் சங்க சம்மேளன அங்கு ரார்ப் பணக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற் றியவடபிரதேசசல்விப் பணிப் பாளர் திரு. தி. மாணிக்க வாசகர் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலுமுள்ள பிரதேச சங்கங்களிலிருந்து ஐந்து உறுப்பினர்கள் பிரதி நிதிகளாக கலந்து கொண்ட னர். திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில் "இன்றைய ஆட்சியில் தரப் படுத்தல் நீக்கப்பட்டுள்ளது, சுதந்திரமாக பல்கலைக்கழகங் கள் இயங்கும் நிலை ஏற்பட்ட துப் கல்வியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் நல்ல எதிர்காலம் உருவாகி வருவ தாக அமைகின்றது. இவற்றை நாம் முறையில் பயன்படுத்தி முன்னேற முயல வேண்டும்" என்றார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர் னாண்டோ பேசுகையில், அந்நி யர் ஆட்சிக்காலத்தில் எமது நாட்டின் வளத்தை சுரண்டுவ தற்காக மட்டுமே கல்வியை பயன்படுத்தினர். இன்று எமது நாட்டின் முன்னேற்றத் திற்கும், அபிவிருத்திக்கும் ஏற்ற கல்விமுறைகளை நாம் சுதந்தி ரமாக செயல்படுத்த வசதி யேற் றப் பட் டுள்ளது. இதனால் அரசு கல்விக்கு மட்டும் 10 வீதமான நிதியை ஒதுக்கிவருகிறது. ஒரு டாக்ட ருக்கு நோயாளியை பார்க்கும் பொறுப்பு எப்படி பிருக் கிறதோ அதே போலத்தான் ஆசிரியர்களும் மாணவர்களின் கல்வி விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும். நாம்செய் யும் ஒவ்வொரு காரியங்களும் எமது நாட்டின் நலனுக்கும், வளர்ச்சிக்கும் பயனுள்ளதாக அமையவேண்டும். அரசாங்க ஊழியர்களாயினும் சரி, வேறு எந்த துறையில் உள்ளவர்க ளாக இருப்பினும் சரி, கடமை களை மக்களுக்கு உதவும் வகை யில் செய்வதுதான் எமதுநாட் டுக்கு செய்யும்நன்மையாகும்" என்றார்.

இக்கூட்டத்தில் பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் தேசிய சம்மேளனக் கூட்டத்தில் பிரதிநிதிகளாக கலந்துகொள் வதற்கு திரு. கே. கனகசபா பதி, திரு. எஸ். பாஸ்கரன், திரு. ஆ. துரைராஜசிங்கம் ஆகியோர் ஏகமனதாக தெரி யப்பட்டனர்.

பிரதம வட்டாரக்கல்வியதி காரி திரு. என். ஆர். பாலசிங் கம் ஆரம்பஉரைநிகழ்த்தினர், தெல்லிப்பழை மகாஜனக்கல் லூரி அதிபர் திரு. ஜே. கனக சபாபதி அதிபர்கள் சார்பில் கருத்துரை வழங்கினர். (உ)

"கடின உழைப்பிலேயே முன்னேற்றம் உள்ளது"

-- யாழ். மேலதிக அரசாங்கஅதிபர்

(உடுப்பிட்டி)

"கிராம மக்களின் விடா முயற்சியினாலும், கடினஉழைப் பினாலுமே கிராமங்கள் முன் னேற முடியும். கிராமமுன் னேற்றத்திலேயே அக்கிராமத் தின் பெருமையும் தங்கியுள் ளது. கிராஞ்சி-சிவபுரம்ஆகிய கிராமங்கள் மிகவும் பின்தங் கிய நிலையிலுள்ளன. இக்கிரா மங்களை முன்னேற்றுவதற் கான நடவடிக்கைகளை அர சாங்கம் மேற்கொள்ளவுள் ளது ஆதலால் இக்கிராம அபி விருத்திச் சங்கத்தின் மூலம் இக்கிராம மக்கள் தமது குறை பாடுகளைப் போக்கிக்கொள்ள ஒத்துழைக்கவேண்டும்".

இவ்வாறு கிராஞ்சி-சிவபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தின் விசேட பொதுக்கூட்டத் தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற் றிய யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். ஜெகநாதன் கேட்டுக்கொண் டார்.

சங்கத் தலைவர் திரு. க. பர மானந்தம் தலைமையில் நடை பெற்ற இக்கூட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கப்பொதுச் செயலாளர் திரு. ஆ. க. சுப் பிரமணியம், திருமதி சு. ஆசை முத்து ஆகியோரும் பேசினர்.

பண்டத்தரிப்பு

மகளிர் கல்லூரிக்கு இரண்டுலட்ச ரூபா ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல் லூரியில் இரண்டு லட்சம் ரூபா செலவில் இருமாடிக்கட் டிடம் ஒன்று விரைவில் நிறு வப்படவுள்ளது.

"இதற்கான நிதியை வட் டுக்கோட்டைத் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கி யுள்ளார்.

மேற்படி கல்லூரி அதிபரும் பெற்றூர் - ஆசிரியர் சங்கத் தலைவருமான திருமதி க. ஆறு முகதாசன் இக்கட்டிடத் திற்கான கட்டிட வேலை களை உடன் ஆரம்பிப் பதற்கு வேண்டிய நடவடிக் கைகளை மேற்கொண்டுள் ளார். (உ)

தாய் கண்டித்ததால் மகள் உயிர் போக்கினாராம்

வவுணதீவில் சம்பவம்

(மட்டக்களப்பு)

இளம்பெண் ஒருவரை தாய் கண்டித்ததால் மனமுடைந்து அப்பெண் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண் டார். இப்பரிதாப சம்பவம் வவுணதீவில் நடைபெற்றது.

இவ்வாறு தற்கொலைசெய்து கொண்டவர் அதே இடத் தைச் சேர்ந்த செல்வராசா ஈஸ்வரி (16 வயது) என்ற இளம்பெண்ணாகும்.

இம்மரணம் தொடர்பாக ஏச்சந்தீவு கிராமசபைப்பிரிவு சடுதி மரணவிசாரணை அதி காரி திரு. ஞா. சிவபாதம் விசாரணை நடாத்தினார். அப் பொழுது சாட்சியங்கள் மூலம் தெரியவந்ததாவது:

சம்பவதினம் காலஞ்சென்ற வரும் அவரது இளையசகோதரி யும் சண்டையிட்டனராம். இதை அவரது தாயார் கண் டித்தாராம். இதனால் மன முடைந்த அப்பெண் கிணற் றினுள் குதித்துத் தற்கொலை செய்துகொண்டாரெனத்தெரி விக்கப்பட்டது.

விசாரணை முடிவில் தற் கொலை எனத் தீர்ப்பு வழங்கப் பட்டது. (உ)

எம். பி. உதவி

(பண்டத்தரிப்பு)

"சாந்தை கிராம மக்க ளின் நீண்ட கால பிரச்னை யான தண்ணீர்ப் பிரச்னை யை தீர்த்து வைக்கும் பொரு ட்டு இப்பகுதியில் அரசா ங்கச் செலவில் பொதுக்கிணறு ஒன்றை அமைப்பதற்குத் திட் டமிட்டிருக்கிறேன். இக் கிண ற்றை நிறுவுவதற்கான காணி யை வீலை கொடுத்து வாங்க வேண்டும். இதற்கு எனது பாராளுமன்ற அலவன்சை பயன்படுத்தி காணியை வாங் கித் தருவேன்.

இவ்வாறு வட்டுக்கோட் டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு சாந்தை தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையினால் தமக் களிக்கப்பட்ட வரவேற்பு உப சாரக் கூடடத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார், (உ)

யாழ். சலுசலா ஊழியர்களுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சலுசலாவில் கடமையாற்றிய 11 ஊழியர் களுக்கு இம்மாதம் 10ம் தேதி முதல் இடமாற்றம் கிடைத் துள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடந்த கலவரத்தைத் தொடர்ந்து யாழ். சலுசலா சேதப்படுத்தப்பட்டதால் பூட் டப்பட்டிருந்தது. ஊழியர்கள் தொடர்ந்து யாழ்ப்பாணத்தி லேயே இருந்து வந்தனர். அவர்களுக்கு சம்பளம் வழங் கப்பட்டு வந்தது.

அங்கு கடமையாற்றிய ஒரு பெண் ஊழியர் உட்பட மூவர் மட்டக்களப்பிற்கும், 3 பேர் குருநாகலுக்கும், மற் ஏனையோர் கொழும்பிற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள் ளதாக ஊழியர் ஒருவர் தெரி வித்தார். குருநாகலுக்கு இட மாற்றம் பெற்றுள்ள மூவரும் இந்த இடமாற்றத்தை ஆட் சேபித்துள்ளனர் எனத் தெரி யவருகிறது. (க-உ)

இந்திரா கொலை முயற்சி வழக்கு: கருணாநிதியுடன் ஊர்வலமாகச் சென்று 130 பேர் குற்றப்பத்திரிகை பெற்றனர்

சென்னை, ஆக. 1

தி. மு. க. தலைவர் திரு. மு.கருணாநிதி, பொதுச்செயலாளர் திரு. அன்பழகன், பொருளாளர் ஜனுப் சாதிக் பாட்சா உட்பட 130 தி. மு. க. வினர் தமக்கெதிராகச் சுமத்தப்பட்ட இந்திரா கொலை முயற்சி மீதான குற்றப்பத்திரங்களை நேற்று நீதிமன்றத்திற்கு ஊர்வலமாகச் சென்று பெற்றுக்கொண்டனர்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்து அவரைக் கொலை செய்ய முயன்றதாக திரு. கருணாநிதி மீதும் மற்றும் 133 பேர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. நேற்று சென்னையில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் இவர்களுக்கு குற்றப்பத்திரம் தாக்கல் செய்தபோதே இவர்களில் 130 பேர் ஊர்வலமாகச் சென்று குற்றப்பத்திரிகைகளைப் பெற்றுக்கொண்டனர். (இ)

30 மந்திரிகள் அமைச்சரவை இன்று பதவியேற்பு

பம்பாய், ஆக. 1

மகாராஷ்டிரத்தில் திரு. சரத் பவார் தலைமையிலான 30 பேர் கொண்ட அமைச்சரவை நாளை புதன்கிழமை பதவி ஏற்கிறது.

இது குறித்து திரு. சரத் பவார் நேற்று புதுடில்லியில் பிரதமர் திரு. தேசாய், ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் ஆகியோருடன் பேச்சு நடத்தினர். (இ)

பாரிஸிலுள்ள ஈராக் தூதரகத்தில் பயங்கரவாதிகளின் 9 மணிநேர அட்டகாசம்!

துப்பாக்கிச் சண்டையில் ஒருவர் பலி!! இருவர் கைது!!!

பாரிஸ், ஆக. 1

பாரிசிலுள்ள ஈராக் தூதரகத்தில் 10 பேரை பணயமாக வைத்திருந்த 3 துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதிகளுக்கும் ஆயுதப்படையினருக்குமிடையே நிகழ்ந்த துப்பாக்கிச்சண்டையைத்தொடர்ந்து பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதுடன் 9 மணித்தியாலம் நடந்த பயங்கரநாடகம் முடிவுக்கு வந்தது.

கடந்தவாரம் இடம்பெற்ற பிரிட்டனிலுள்ள ஈராக் தூதுவர் கொலை முயற்சி தொடர்பாக கைது செய்து காவலில் வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவரை விடுதலை செய்யுமாறும் பாரிசிலிருந்து லண்டன் செல்ல தமக்கு விமானமொன்றைத் தருமாறும் கோரிய 3 பயங்கரவாதிகள் பாரிஸ், ஈராக் தூதரகத்தில் 10 பேரை பணயமாகப் பிடித்து வைத்திருந்தனர். காயமடைந்த இரு பணயக் கைதிகள் சிறிது நேரத்தில் விடுதலை செய்யப்பட்டனர்.

9 மணித்தியாலங்களுக்குப் பின்னர் பிரெஞ்சு ஆயுதப் படையினர் நடத்திய திடீர் தாக்குதலின்பின் பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இத்துப்பாக்கிச் சண்டையின்போது பயங்கர

(7-ம் பக்கம் பார்க்க)

கோப்பி விலை குறைந்தது

லண்டன், ஆக. 1

உலகச்சந்தையில் கோப்பியின் விலைகுறைந்ததையடுத்து கோப்பி உற்பத்தி செய்யும் நாடுகளிலும் கோப்பியின்விலை குறைந்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (இ)

ரெடீஷியாவில் இரத்தக்களரியை தடுக்க...

சாலிஸ்பரி, ஆக. 1.

ரெடீஷியாவில் இரத்தக்களரி ஏற்படுவதைத் தடுப்பதற்கு ஒரேவழி ரெடீஷியப் பிரதமர் திரு. இயன்சிமித் உடன் தமது பதவியை ராஜினாமாச் செயயவேண்டும்.

இவ்வாறு பொதுநல அமைப்பு நாடுகளின் பிரதமசெயலாளர் திரு. ரம்பால் தெரிவித்துள்ளார். (இ)

யமஹாவின் நம்பகமான சக்தியுடன் உங்கள் எதிர்காலத்தை உறுதி செய்யுங்கள்

மீன்பிடிதொழில் கடினமானது. அதில் வெற்றிகாண்பதற்கு ஒரு உறுதியான அவுட்போட் மோட்டார் தேவை. இலகுவாக நன்னீலையில் வைத்திருக்கக்கூடிய நம்பகமான மோட்டார் தேவை. அது சிக்கனமானதாயுமிருக்க வேண்டும். இவையெல்லாம யமஹாவில் கிடைக்கும். உலகிலுள்ள 100க்குமதிகமான நாடுகளிலுள்ள மீனவர்கள் இதனை அறிந்திருக்கிறார்கள.

எமது 8HP, 15HP மண்ணெண்ணை மோட்டார்கள் உங்களுக்கு மிகக் குறைந்த செலவில் அதிக லாபம் பெறக்கூடியதாகவே உருவாக்கப்பட்டு, அமைக்கப் பட்டவை. ஒவ்வொரு யமஹாவும், துருப்பிடிக்காமலும், அரிக்காமலும் பாதுகாக்கப்படுகிறது. பிரதான உறுப்புக்கள் விசேடமாக கடினமாக்கப்பட்டு உங்களுக்கு நீண்டகாலம் தடங்கலில்லாமல் சேவையளிக்கவென்றே முழு இயந்திரமும் இணைக்கப்பட்டுள்ளது.

இன்றே ஒரு புதிய யமஹா அவுட்போட் மோட்டாரை வாங்குங்கள்.



ஏகமுகவர்களுடன்
தொடர்பு கொள்ளுங்கள்
கொன்சொலிடேற்றெட் எஞ்சினியரிங் கொம்பனி..
101 ஐபூ ரோட், கொழும்பு-2.
தெலிபோன்-35464, 35009
தந்திகள்: 'KEROMARIN' - கொழும்பு.

யமஹா

GRANT K & E 673

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
4 TH MERCENARY &
LASTWEEK
Peter Fonda,
DIAMOND
MERCENARIES

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சிவகுமார் - ஜெய்சித்ரா
சொல்லத்தான்
நினைக்கிறேன்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை
முடிப்பவன்
(புதிய- பிரதி கலர்)

REGAL Jaffna
Daily at 4-45, 7- & 9-30 p m only
The Story of a Love that Defied Death
Gamini Fonseka
in
'SEETHA DEVI'
Eastman Color (English)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
படித்தால் மட்டும் போதுமா
(புதியபிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த் -- பிரமிளா
அரங்கேற்றம்

லிடோ (யாழ். நகர்)
போன்: 7698
சிவகுமார், அல்கா
மதனமாளிகை

மனேகரா (யாழ்ப்பாணம்)
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - L. விஜயலட்சுமி
வல்லவன் ஒருவன்

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ்நகர்.- போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30. 9-45காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அமோதமும் ரசிகர்கள் கூட்டம்!
பார்த்துப் பரவசமடைந்தவர்கள் மீண்டும்
பார்க்கும் நோட்டம்!
ரகுநாதன்... குமுதினி ...சந்திரகலா... தனரத்தினம்
நடித்த
தேன் சுவையூட்டும் தீந்தமிழ் கீதம் மலிந்த
தெய்வம் தந்த வீடு
(சினிமாஸ் கோப்)

இன்று

வண்ணை சிவன் கோயிலில் தேவி மகோற்சவம் 5 ம் திரு விழாவாகிய இன்று பகல் திரு விழா 9 மணிக்கும், மாலை திருவிழா 6-30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை ஆகி புஷ்பப் பல்லக்கில் வெளிவீதி வலம் வருதலும், இரவு 9 மணிக்கு அர்த்தசாமப் பூஜையும் நடைபெறும்.

ஆடிப்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ சிவகாமி அம்பிகை தேவஸ்தானத்தில் இம்மாதம் 6-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூரத் திருவிழா நடைபெறவிருக்கிறது. அன்று பகல் விசேஷ அபிஷேகமும், அம்பாளுக்கு ருதுசோபனசாந்தி வைபவமும் நிகழும். இரவு விசேஷ திருவிழா நடைபெறும்.

யாழ். நகரில் 25-ம் திகதி

திரைப்படவிழாவைகலாச்சார மந்திரி ஆரம்பித்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கலாச்சார மன்ற ஆதரவில் நடைபெற விருக்கும் திரைப்படவிழாவை தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு டி. பி. விஜதுங்கா, இம் மாதம் 25 ம்திகதி ஆரம்பித்து வைப்பார்.

யாழ். சாந்தி தியேட்டரில் 25ம் தேதி ஆரம்பமாகும் விழா 31ம் தேதி வரை நடைபெறவிருக்கிறது.

25ம் தேதி பொன்மணியும், 26ம் தேதி 'மதுல் துப்வம், 27 ம் தேதி கிறேற் பறியர் நீங் என்ற படமும், 28 ம் தேதி தஹராக்கன் எக்கேக் என்ற படமும், 29ம் தேதி வாடைக் காற்றும், 30 ம் தேதி றேமியோ ஜூலியட்அன் டாக்னஸ், என்ற படமும், 31ம் தேதி துல்மங் ஹன்தயா வும் திரையிடப்படவிருக்கிறது.

திரைப்பட ஆரம்ப விழாவில் யாழ். எம்.பி. திரு.யோகேஸ்வரனும் கலந்து கொள்வார்

தினமும் காலை 10-30 மணிக்கு மாணவர்களுக்காவும், இரவு 6-30 மணிக்கு பொது மக்களுக்காகவும் கார்ட்சிகள் நடைபெறவிருக்கின்றன.

இத்திரைப்படவிழா தொடர்பாக அரசாங்க செயலகத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கலாச்சார மன்றத்தின் சேவைகள் பற்றி அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ விளக்கினார்.

மிகவும் ஏழைகளாகவுள்ள கலைஞர்களின் திறமைகளை உலகிற்கு எடுத்துக் காட்டவும். அவர்களை ஊக்கப்படுத்தி முன்னுக்குக் கொண்டுவரவும், கலாச்சார மன்றம் பாடுபடும் என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

செலிப்புலனற்ற இலங்கைஞர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் நடத்திய தனிநபர் ஓவியக் காட்சியை கொழும்பில் நடத்துவதற்கும், இவர் போன்ற மற்றும் வசதிகுறைந்த கலைஞர்களை ஊக்கப்படுத்தவும் மன்றம் தொடர்ந்து பாடுபடுமென்றும் தெரிவித்தார்.

வாய்ப்பாட்டிலும் இசையிலும் திறமைமிக்க எத்தனையோ கலைஞர்கள் இவை மறைகாய்போல் இருப்பதாகவும், அவர்களின் துறையை வெளிப்படுத்த மன்றம் உழைக்கும் என்றும் அவர் மேலும் கூறினர். (க.உ)

சைவப்பெரியார் நூற்றாண்டு

போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் நூற்றாண்டு விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில பாடசாலைகளுக்கிடையே நடாத்தப் பெற்ற பேச்சுப்போட்டி, திருமுறைப் போட்டிகளில் பரிசு பெறுவோர் விபரம் கீழே தரப்படுகிறது. இப்போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. பரிசு பெறும் மாணவர் விபரம் வருமாறு:-

பேச்சுப் போட்டி

ஆண்கள் கீழ்ப்பிரிவு

சி. சிற்சபேசன்-யாழ்இந்து, சி. சுபேந்திரன்-உசன் இராமநாதன் ம. வி., சு. நேசானந்தன் - யாழ்ப்பாணக் கல்லூரி.

ஆண்கள் மத்திய பிரிவு

கு. குமாரசூரியர் - யாழ். இந்து, செ. பிரபாகரன் மானிப்பாய் இந்து, செ.இரகுதேவ் - சாவகச்சேரி இந்து.

ஆண்கள் மேற்பிரிவு

இ. பாலபாஸ்கரன் - மகாஜனா, ச.தேவானந்தன்-யாழ்ப்பாணக் கல்லூரி, இரா. மனோகரன் - வித்தியானந்தா - முள்ளியவளை,

பெண்கள் கீழ்ப்பிரிவு

ந. பூமா - வேம்படி மகளிர், க. வாணி-வசாவிளான் ம.ம.வி., து. மங்களகுமாரி-யாழ். இந்து மகளிர்,

பெண்கள் மத்திய பிரிவு

சு. தாரகா - யூனியன் கல்லூரி, என். சாமினி - மெதடிஸ்ட் கல்லூரி, மு. லோகராஜினி-உசன் இராமநாதன்.

பெண்கள் மேற்பிரிவு

தி. பாலகௌரி - மானிப்பாய் இந்துக்கல்லூரி, க.வேதவல்லி-பண்டத்தரிப்பு மகளிர், செ. சாந்தநாயகி - யூனியன் கல்லூரி.

திருமுறைப் போட்டி

ஆண்கள் கீழ்ப்பிரிவு

தி. மோகன் - யூனியன் கல்லூரி, சு. ஸ்ரீகுமார் - யாழ். இந்துக் கல்லூரி, க. தவராசா கொக்குவில் இந்து.

ஆண்கள் மத்திய பிரிவு

சி. குலசிங்கம் - டிறிபேக் கல்லூரி, பா. கண்ணன்-ஸ்ரீசோமாஸ்கந்தா, இ. சிவநேசன் - யாழ். இந்து.

ஆண்கள் மேற் பிரிவு

வை. கணேசலிங்கம் - மகாஜனா, இ. பிரேமதசரதன்-வேலாயுதம் ம. வி, எம் கடம்பநாதன் - வேலாயுதம் ம. வி.

பெண்கள் கீழ்ப்பிரிவு

சு. மேனகா - யூனியன் கல்லூரி, ச. ஸ்ரீகாகாந்தி - டிறிபேக், உ. ஔவை-மகாஜனா,

பெண்கள் மத்திய பிரிவு

சு. தாரகா - யூனியன், இ. லிங்கேஸ்வரி அருணோதயாக் கல்லூரி, யோ. மிதிலா யாழ். இந்து மகளிர்.

பெண்கள் மேற்பிரிவு

சு. வேண்ணிலா - யூனியன், சோ. ஹம்சாநந்தினி - மகாஜனா, து. திருமறைச்செல்வி-மெதடிஸ்த கல்லூரி. (அ)

சிவநெறிக்கழகம் நடாத்திய போட்டி முடிவு

கீரிமலை சிவநெறிக் கழகம் சைவப் பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி நடாத்திய சமய அறிவு போட்டியில்மாணவர்கள் குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் பங்கு கொண்டனர். அவர்களிற் பரிசு பெற்றவர் விபரம் வருமாறு:-

கீழ்ப்பிரிவு

ச. கமலினி - மயிலிட்டி தெற்கு, ஞானோதய வித்தியாலயம், ந. விஜயநந்தினி-இடைக்காடு மகா வித்தியாலயம், சி.ராஜினி - மகாஜனக் கல்லூரி, பா. ஜசிந்தா - மகாஜனக் கல்லூரி, க. கலோசனா-பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண்கள் உயர்தரபாடசாலை,

மத்திய பிரிவு

மு. மலர்மதி - மகாஜனக் கல்லூரி, க. பத்மினி - மகாஜனக் கல்லூரி, மு. மணிமாறன் - மகாஜனக் கல்லூரி, பொ. மைதிலி - மகாஜனக்கல்லூரி, த. பரிதிகுலசோமன்-மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம்.

மேற்பிரிவு

செ. நவநீதன் சித்திரமேழி-இளவாலை, வே. ரதி - யூனியன் கல்லூரி, செ. இந்திராணி - மகாஜனக் கல்லூரி, ந இளமதி - மகாஜனக்கல்லூரி, வ. சர்வாம்பிகை - யூனியன் கல்லூரி.

விசேஷ பரிசு

கூடுதலான மாணவர்கள் தோற்றியமைக்கான பரிசு:-

பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை.

கூடுதலான மாணவர்கள் பரிசு பெற்றமைக்கான பரிசு:-

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி.

பரிசளிப்பு வைபவம் இன்று புதன்கிழமை இரவு கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் இடம்பெறும். (இ)

இடமாற்றம் ரத்து

(யாழ்ப்பாணம்)

சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. பொ. கதிர்வேலாயுதபிள்ளையின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் அக்கரைப்பற்று மக்கள் வங்கிக் கிளைக்கு அனுப்பப்பட்ட இவரின் இடமாற்றம் பின்னர் கடந்த ஜூலைவரை பின்போடப்பட்டிருந்தது.

சங்கானை மக்கள் வங்கிக் கிளை எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், எம்.பிக்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்கவே இவரின் இடமாற்றத்தை மக்கள் வங்கி தலைமைக் காரியாலயம் தற்போது ரத்துச் செய்துள்ளது. (இ)

பாரிஸிலுள்ள..-

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

வாதி ஒருவரும், ஆயுதப் படையைச் சேர்ந்த ஒருவரும்பலியாகினர். மற்றும் இரு பயங்கரவாதிகளையும் பொலிசார் கைதுசெய்தனர். (இ)

வெளிநாட்டவர் 'டூப்' வெளிப்பட்டது

(கொழும்பு)

இலங்கைவரும் சில வெளிநாட்டவர்கள் பொலிசாருக்குப் பொய் யான புகார்கள் செய்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தாம் கொண்டுவந்த கமரா, டாலர்கள் என்பன திருட்டுப் போய்விட்டதாக இவர்கள் பொலிசில் பொய்ப்புகார்களை செய்வதாகவும், உண்மையில் இவர்கள் இப்பொருட்களைக் கூடியவிலைக்கு விற்றுவிடுகிறார்கள் என்றும் பொலிசார் தெரிவித்தனர். (உ)

அமெரிக்க ரஷ்ய நல்லுறவு இன்றேல் உலகில் அமைதி ஏற்படாது

இந்தியப் பிரதமர் கருத்து

புதுடில்லி, ஆக. 1

"அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்குமிடையே நட்புறவு இல்லாவிடின், உலகில் என்றுமே அமைதியேற் படமுடியாது."

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில், தம்மைச் சந்தித்த பாதிரியார் குழுவினர் மத்தியிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

"அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்குமிடையே நட்புறவை ஏற்படுத்தும் பொருட்டு, மத்தியஸ்தம் வகிக்க இந்தியா என்றுமே தயாராக உள்ளது" என்றும் திரு. தேசாய் கூறினர்.

ஓங்கார ரூபா

மாவிட்ட புரத்தானே மனத்திலுன்னி,
பாவிட்ட பதத்தானே பணிந்து நண்ணி
மேவிட்ட தேரானைத் தெளிந்து தேர்ந்து
பூவிட்ட பூங்கழலைப் போற்றி செய்வாம்.

தேடி வந்தேன் முருகா தெள்ளுதமிழ்
பாடி வந்தேன் பலகால் உள்ளமுருக
நாடி வந்தேன் நாதா உன்னை நினைந்
தோடி வந்தேன் ஓங்கார ரூபா.

-சபா. நாகராஜன்

இனந்தெரியாத சடலம்

[யாழ்ப்பாணம்]

இனந்தெரியாத வாலிபர் ஒருவரின் சடலம் ஒன்று ரயில் வே தண்டவாளம் அருகே கிடந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 27 வயது மதிப்பிடத்தக்க 5 அடி 2 அங்குலமுள்ள இந்த வாலிபர் மெல்லிய நீல நிற லோங்ஸ்லீவ் மெல்லிய பச்சை வர்ண ஷோர்ட்டும் அணிந்திருந்தார். முடிவளர்த்துள்ள இவர் கருமைநிறமுள்ளவர்.

கடந்த திங்கட்கிழமை இரவு மெயிலில் இருந்து விழுந்து மரணம் சம்பவித்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

உறவினர்கள் யாழ். பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (உ)

'உடல், உள வளர்ச்சிக்கு விளையாட்டு பயன்தரும்'

- ஏ. எஸ்.பி. ஆனந்தராஜா

(நெல்லியடி)

"மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி உடல், உள வளர்ச்சி பெற்று சமுதாயத்தில் திடகாத்திரமாக வாழ்வதற்கு விளையாட்டுக்களில் பங்கெடுத்துக்கொள்ளல் வேண்டும். வெற்றி தொடர்ந்து கிடைக்கக்கூடியது எனக்கருதி தோல்வியைக்கண்டு துவண்டு விடக்கூடாது. தோல்விதான் வெற்றியின் ஆரம்பப்படி என்பதை நன்கு உணரல் வேண்டும்.

மேற்கண்டவாறு பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் உதவிபொலிஸ் அதிபர் திரு. ஏ. இ. ஆனந்தராஜா குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் திரு. எஸ். எஸ். சாமுவேல் தலைமையில் நடைபெற்றது.

அதிபர் தமது தலைமையுரையில் தெரிவித்த தாவது: தன்னலமற்ற வாழ்க்கைமுறை தன்னடக்கம், பொறுமை, முயற்சி, தேரம் தவறுமை என்பனவற்றை மாணவர்கள் கடைப்பிடிக்கவேண்டும். ஒவ்வொரு மாணவர்களும் நன்குணர்ந்து சமுதாயத்திற்காகவும், கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் உழைக்கவேண்டும் என்றார்.

இல்லங்களுக்கிடையிலான போட்டியில் போல்பிள்ளை இல்லம் 1-ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. வெற்றிபெற்ற மாணவர்களுக்கு திருமதி ஆனந்தராஜா பரிசில்களை வழங்கினார். (உ)

சங்கானை பெண்கொலை:

இருபெண்கள் உட்பட மூவருக்குப் பிணை

(மாவிட்டபுரம்)

சங்கானை பெண்மணி கொலை தொடர்பாக நிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 5 சந்தேக நபர்களில் இருபெண் சந்தேக நபர்களும், மற்றொரு சந்தேக நபரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த ஜூன் மாதம் 7ம் திகதி சங்கானையைச் சேர்ந்த சரஸ்வதி என்னும் பெண்மணி கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டது தொடர்பாக சங்கானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சின்னவன் மகேந்திர ராசா கணபதி இராசேந்திரம் ஆகியோரும் நாகன் கண்மணி, சின்னவன் பாக்கியம் ஆகிய பெண்மணிகளும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் பெண்மணிகள் இருவரையும், மற்றொரு சந்தேக நபரான கணபதி இராசேந்திரம் என்பவரையும் பிணையில் விடுமாறு கடந்த தவணை அவர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் கோரிய போது அவர்களுக்கெதிரான சாட்சியங்களை ஆராய்ந்த பின்பே அதுபற்றி முடிவெடுக்கலாம் எனக்கூறிய மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி அவர்களுக்கெதிரான சாட்சியங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சங்கானைப் பொலிசாருக்கு உத்தரவிட்டிருந்தது.

மேற்படி நபர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் பொலிசார் சமர்ப்பித்த சாட்சியப் பதிவுகள் ஆராயப்பட்டன.

மேற்படி இருபெண் சந்தேக நபர்களும் கொலையுண்ட பெண்ணை கைகளால் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக சாட்சியங்களில் கூறப்பட்டுள்ளதால்கைகளால் அடித்து கொலையை வருவித்திருக்க முடியாதாகையால் அவர்கள் மீது கொலைக்குற்றச் சாட்டு முடியாதெனக்கூறிய சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரெத்தினம் அவர்களைப் பிணையில் விடுமாறும் மற்ற சந்தேக நபரான கணபதி இராசேந்திரத்திற்கெதிரான சாட்சியங்கள் இல்லாததபடியால் அவரைப் பிணையில் விடுமாறும் கோரினர்.

இதுபற்றி பரிசீலித்த நீதிபதி பெண்களிருவரையும் தலா 1000 ரூபா உறுதிப் பிணையிலும் மற்றைய சந்தேக நபரை 5000 ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

மற்றைய இரு சந்தேக நபர்களும் தொடர்ந்து நிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (உ)

கொக்குவில் வாசி சுட்டுப் படுகொலை

மர்மக்கொலைஞர் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு வாசி ஒருவர் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டுள்ளார்.

விஜயரத்தினம் துரைராஜசிங்கம் என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

ஆஸ்பத்திக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கிடையில் இவரது உயிர்பிரிந்ததாம். கடந்த திங்கட்கிழமை இரவு 10-30 மணியளவில் நடந்த இம் மர்மக்கொலை தொடர்பாக பிரஸ்தாப இனந்தெரியாத நபர்களையும் CN 3052 இலக்க முடைய ஒஸ்ரின் A 40 காரொன்றையும் ஆனைக்கோட்டைப் பொலிசார் தேடி வருகின்றனர். (உ)

13வயதுசிறுவனின் 'உலக' சாதனை!

லண்டன், ஆக. 1

13 வயதுச் சிறுவன் ஒருவர் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்து புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்த கால் பெனிசன் என்ற கல்லூரி மாணவனே இச்சாதனையைப் புரிந்துள்ளார்.

சுமார் 30 மைல் தூரத்தை இச்சிறுவன் 12 1/2 மணித்தியாலத்துக்குள் நீந்திக் கடந்துள்ளார்.

நியூஜிலாந்தைச் சேர்ந்த மெடா மக்கன்ஸி (16 வயது) சன்ரு பெலிவிட் (28 வயது) ஆகிய இருபெண்களும் இச் சிறுவனுடன் நீந்தினர்.

மெடா 13 மணித்தியாலத்தில் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்தான். சன்ரு பெலிவிட் கரைக்கு 7 மைல்தூரம் இருக்கையில்கைவிட்டார் இதுவரை ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்தவர்களுள் கால் பெனிசன் என்றஇச்சிறுவனேவயதில் குறைந்தவராவார். கடந்த வருடம் 13 வயதில் இக்கால்வாயை நீந்திக்கடந்த டேவிட் மோர்கன் என்னும் சிறுவனே விட பெனிசன் 71 நாட்கள் வயதில் குறைந்தராவார். (இ)

தமிழர்களின் இன்றையநிலை சுயாட்சிக்கழகம் ஆராயும்

(வண்ணைப்பண்ணை)

தமிழர் சுயாட்சிக்கழகத்தின் பொதுக்கூட்டம் ஒன்று இம் மாதம் 6-ம் திகதி வேலணையில் நடைபெறவிருக்கின்றது.

தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தீவுப்பகுதி மாவட்டக் கிளையின் ஆதரவுடன் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்திற்கு கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் தலைமைதாங்குவார்.

தமிழ்மக்களின் இன்றைய நிலைமை பற்றியும், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் இதுவிடயத்தில் கடைப்பிடிக்கும் முறைகள் பற்றியும் தமிழ்மக்கள் மத்தியில் எடுத்துக்காட்டுமுகமாக தமிழர் சுயாட்சிக்கழகம் தொகுதி வாரியாக மேற்கொள்ளவிருக்கும் பொதுக்கூட்டங்களின் தொடரில் இது முதலாவது கூட்டமாக அமையவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

சிங்களத் தேர்ச்சியின்மை:

விவசாய விரிவாக்க ஊழியர் மகஜர்

(யாழ்ப்பாணம்)

சிங்களத்தில் சித்திபெறத் தவறிய காரணத்தினால் ஆனி மாதத்தில் இருந்து வேலை நீக்க அறிவித்தல் வழங்கப்பட்ட தமிழ் விவசாய விரிவாக்க ஊழியர்கள் தமக்கு நிவாரணம் பெற்றுத்தரும்படி எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமாகிய திரு. அமிர்தலிங்கத்திடமும் மற்றும் தமிழ் எம். பிக்களிடமும் மகஜர் மூலம் கேட்டுள்ளனர். இம்மகஜரில் கூறப்பட்ட விபரங்கள் வருமாறு' அரசுடன் இதுதொடர்பான பேச்சுவார்த்தை முடியும்வரை ஊழியருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படல்வேண்டும். 53 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 22 வருட சேவையை பூர்த்தி செய்த வேலைநீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படல் வேண்டும். இத்தரத்திலுள்ள ஊழியர்கள் தமிழ்ப்பிரதேசங்களிலேயே கடமையாற்றுவதால் சிங்கள மொழித் தேர்ச்சி இவர்களுக்கு தேவையா என்பதுபற்றி ஆராய ஒரு விசாரணைக்கமிஷன் நியமிக்கப்படல்வேண்டும்.

இக்கோரிக்கைகள் தொடர்பாக விவசாய விரிவாக்க ஊழியர் சங்கத் தலைவர் மரியதாஸ், செயலாளர் இ. காசிநாதன், நிர்வாகசபை உறுப்பினர்கள் கா. கந்தசாமி, எம். கணபதிப்பிள்ளை ஆகியோரடங்கிய குழுவொன்று எதிர்க்கட்சித்தலைவரையும் மற்றும் தமிழ் எம். பிக்களையும் சந்தித்து உரையாடிய பின் இம் மகஜரைக் கையளித்தது.

இம்மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதம மந்திரி, தொழில் விவசாய அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சிங்களத் தேர்ச்சியின்மையால் நிறுத்தப்பட்ட இவ் ஊழியர்கள் 27 பேரில் 53 வயதுக்கு மேற்பட்டவர்களும் 22 வருட சேவைபைப் பூர்த்தி செய்தவர்களும் டலர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி-உ)

மரண அறிவித்தல்

நவரத்தினம் முருகையா

நவரத்தினம் முருகையா (ஆசிரியர், மல்லாகம் இந்துக்கல்லூரி) காலமாகிவிட்டார். இவர் செல்லாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், லீலா விஜயசிங்கம், (MADRAS) கமலா ரூஜஸ்கந்தர், (U. K.) நிலா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ்சென்ற ஆனந்தநடராசா ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் மல்லாகம் இல்லத்தில் புதன்கிழமை 2ந் திகதி 4-30 மணியளவில் நடைபெறும். 9912

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram: Ealanaadu - Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka.